பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 15 சனிக்கிழமை 30.11.2024 கதிர் 023



## அரசின் மாவீரர் தின அனுமதிக்காக செல்வம் எம்.பி. நன்றி தெரிவிப்பு

மக்களின் மனதில் இருக்கும் வலி சுமந்த நாளை அஞ்சலி செய்து நினைவுகூரும் மாவீரர் தினத்திற்கு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மற்றும் ஆளும்தரப்பினர் அனுமதியை வழங்கியமைக்கு தனது நன்றிகளை தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

மக்களின் மனதில் உள்ள சோகங்களை இறக்கி வைக்கும் வகையில் மாவீரர்களை நினைவு கூருகிற இந்த சந்தர்ப்பத்தை எவ்வித இடையூறுகளும் இல்லாமல் முன்னெடுப்பதற்கான அனுமதியை வழங்கிய ஜனாதிபதிக்கு முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் மாவீரர் நினைவேந்தலின் போது பொலிஸார் மற்றும் இராணுவத்தின் கெடுபிடிகள் தொடர்ந்த வண்ணம் காணப்பட்ட ☞ 7

## இனிது ரகசியம் அல்ல!

வெளி அழுத்தங்களுக்குப் பின்னர் ரெலோவின் மத்திய குழுக் கூட்டம் இன்று நடப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்று நேற்றுத் தெரிவித்திருந்தேன். ஆனால் அது நடக்கவில்லை. அது மட்டுமல்ல இன்று மத்திய குழுவிற்கு அல்ல தலைமைக் குழுக் கூட்டத்திற்கே மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது என்பதையும் உறுதிப்படுத்த முடிந்தது. அந்தக் கூ-ட்டமும்கூட காலவரையறை இன்றிப் பிற்போடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான காரணம்தான் வேடிக்கையானது. ”தற்போதைய இயற்கை அனர்த்தத்தையொட்டி எமது தலைமைக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்படுகின்றது. புதிய திகதி பின்பு அறிவிக்கப்படும்’’ என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தாழமுக்கம் கடந்து வெள்ளமும் குறைந்த பின்னர்தான் ☞ 2

## மூன்று வைத்தியசாலைகள் கிழக்கு வெள்ளத்தில் மூழ்கின

கிழக்கில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு பிராந்திய வைத்தியசாலை மற்றும் இரண்டு ஆரம்பமருத்துவசிகிச்சைநிலையங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதே மாவட்டத்தில் மேலும் ஆறு உள்ளூர் வைத்தியசாலைகளும் ஆரம்ப மருத்துவ சிகிச்சை நிலையமொன்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார பணிப்பாளர் மெருத்துவர் கோஸ்டா கூறினார். ☞ 7

## கொலைக் குற்றவாளிகள் ஆறு பேருக்குத் தூக்கு

நாரஹேன்பிட்டிபிரதேசத்தில்செத்தவீடொன்றில்ஏற்பட்ட தகராறில் ஒருவரைக் கொன்று 7 பேர் படுகாயமடையக் காரணமாக இருந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 6 பேரையும் குற்றவாளிகள் என்று அறிவித்த கொழும்பு மேல்நீதிமன்றம் அவர்களுக்கு தூக்குத்தண்டனை ☞ 7

## சிவப்பு எச்சிரிக்கை

நாட்டை சூழவுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பகுதிகள் மற்றும் நிலப்பகுதிகளுக்கு வளிமண்டலவியல் திணைக்களம்சிவப்புஎச்சரிக்கைஅறிக்கை ஒன்றை வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கை நேற்று மாலை 6 மணியளவில் வெளியிடப்பட்டுள்ளதுடன், பொது மக்களை அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல்திணைக்களம் ☞ 7

# வெளிநாட்டு அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணியக்கூடாது

## சீனத் தூதுவர் வலியுறுத்து

வெளிநாட்டு அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணியக் கூடாது, குறிப்பாக நாட்டின் பொருளாதார நிலைமையை சில தரப்பினர் பயன்படுத்திக் கொள்ள முயலும்போது, இலங்கை சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையைப் பேண வேண்டும் என இலங்கைக்கானசீனத்தூதுவர்சீசென்ஹொங் தெரிவித்தார்.

சீனத் தூதவர் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இலங்கைக்கு ஏனைய நாடுகளின்உதவிதேவைஎனசிலதரப்பினர்இலங்கை அதிகாரிகளை நம்ப வைத்துள்ளனர். அது சரியல்ல.இலங்கையர்கள்தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பவேண்டும். சீனா போன்ற நட்பு நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டும். ☞ 2

## தோட்டப் பகுதிகளுக்கு பிரதி அமைச்சர் பிரதீப் நேற்றுக் களப்பயணம்



இரத்தினபுரி மாவட்டத்தில் குளிர்ந்த காற்றினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் தோட்டங்கள் மற்றும் ☞ 7

## 141 இந்திய மீனவர்கள் இலங்கை சிறைகளில்

இலங்கையில் தற்போது 141 இந்திய மீனவர்கள்தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 45 பேருக்கு எதிராக வழக்கு விசாரணைகள் இடம்பெறுவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. ☞ 2

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு

சீரற்றகாலநிலையால்பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் அழிவடைந்த அரிசி, கோதுமை, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய், சோயா பீன்ஸ் செய்கையாளர்களுக்கு ஒவ்வொரு ஏக்கருக்கும் அதிகபட்சமாக 40,000 ரூபா நட்டஈடு வழங்கப்படும் என விவசாய பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் சீரற்ற காலநிலையால் பெரும்போகவிவசாயத்தில் 4,800 ஏக்கர் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், 3,900 ஏக்கர் பகுதியளவில் பாதிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

விவசாயத்துறை அமைச்சின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாதிக்கப் பட்டுள்ளவிவசாயிகளுக்கு நிவாரணம்வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மதிப்பீடுகளின் பின்னர் நிவாரணம்வழங்கப்படும் என்றார்.

## வெள்ளத்தால் இறந்தோர் எண்ணிக்கை 15 ஆகியது

கடந்த சில நாட்களாக நாட்டில் ஏற்பட்ட கனமழை வெள்ளம்மற்றும்குளிர்காரணமாகஉயிரிழந்தவர்களின் எண்ணிக்கை15ஆகஉயர்ந்துள்ளதுஎன்றுஅதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பாதிக்கப்பட்டவர்களின் ☞ 2

## அரபுக் கல்லூரி மாணவர்கள் சாவுக்கு பொலீஸ், முப்படையினரே காரணம்

### பொறுப்பற்று நடந்தனர் என்கிறார் ஹக்கீம்

(அஸ்லம் எஸ். மௌலானா)

அம்பாறை மாவட்டம் காரைதீவில் விடுமுறைக்கு வீடு சென்றுகொண்டிருந்த சிறுவர்கள் வெள்ளத்தில்அடித்துச்செல்லப்பட்டு உயிரிழந்தமைக்கு பொலிஸார் மற்றும் முன்படையினரின் பொறுப்பற்ற செயற்பாடுகளே காரணம் என்று முஸ்லிம் காங்கிரஸ்தலைவர்ரவூப்ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார். அவர் கிழக்கு மாகாண ஆளுநரை நேற்றுச் சந்தித்துப் பேசினார். அப்போ-து இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட இடர் பாதிப்புகள் தொடர்பிலும் இடர் முகாமைத்துவம் மற்றும் உதவிப் பணிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. ☞ 7

## வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாகவே செயற்படுகிறார்கள்

### ஆளும் தரப்பினர் மீது ராஜித குற்றச்சாட்டு

ஆளும்தரப்பு தாம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிராகவே நாளுக்கு நாள் செயற்பட்டு வருகிறது. என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம்பேசியபோது இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு தாம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு எதிராகவே நாளுக்கு நாள் செயற்பட்டு வருகிறது. ஜே.வி.பி.யும் தேசிய மக்கள் சக்தியும் தம்மைத் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அவர்களுக்கு இயற்கைப் பேரிடர் தெரியவந்திருப்பது ஆச்சரியம்தான்.

நான் ஏற்கனவே சொல்லியிருந்தேன் மத்திய குழு மற்றும் பொதுக் குழுவில் தலைமைப் பதவியில் இருப்பவர்களுக்கு ஆதரவு குறைவு என்ற காரணத்தால் அவர்கள் இப்போதைக்கு அவற்றைக் கூட்டமாட்டார்கள் என்று. அப்படிக் கூட்டினால் அது முதலுக்கே மோசமாகிப் போய்விடும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆக மொத்தத்தில் இன்றைய கூட்டம் தொடர்பிலான அறிவிப்புக் குறித்து என்ன ஏது என்று நோண்டினேன்.

கட்சியின் மத்திய குழு அல்லது பொதுக் குழுவை உடனடியாகக் கூட்டும்படி கேட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் கட்சியின் செயலருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அது ஊடகங்களிலும் வெளிவந்திருந்தது. அது குறித்து செயலாளர் எந்தப் பதிலும் வழங்காத நிலையில் வினோ அலைபேசியில் செயலாளருடன் தனது கடிதம் குறித்துப் பேசியுள்ளார்.

அதற்கு, முதலில் தலைமைக் குழுவைக் கூட்டுவோம், அதற்கு வாருங்கள் அங்கு பேசி ஆராய்ந்த பின்னர் மத்திய குழுவைக் கூட்டலாம் என்று கூறப்பட்டிருக்கின்றது. அதற்கேற்ற வகையில்தான் நவம்பர் 30 தலைமைக் குழுக் கூட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், பின்னர் அதை காலவரையறை இன்றி ஒத்தி வைத்ததற்கும் உள்வீட்டு அரசியல் இருக்கின்றது. இந்தக் கூட்டம் முன்னாள் எம்.பி. வினோவைச் சமாளிப்பதற்காகப் போடப்பட்டது. அந்தக்கூட்டத்தில் தலைமையை ஒரு பிடிபிடித்து, அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அடுக்கி தற்போதைய தலைமை தேர்தல் தோல்விக்கு முழுப் பொறுப்பேற்று பதவிவிலகி இளையவர்களிடம் கட்சியைக் கையளிக்கவேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்து வாதாடுவதற்கான தயார்ப்படுத்தல்கள் எல்லாவற்றையும் செய்திருந்தார்.

இன்றைய கூட்டம் நடந்திருந்தால் ரெலோ தலைமையை தோலுரிப்பதுதான் வினோவின் நோக்கம். அதற்கான எல்லாத் தயார் நிலையிலும் அவர் இருந்தார். இதற்கிடையில் டிசெம்பர் 5 அவர் லண்டன் செல்கிறார்கள். அவரது குடும்பத்தினர் அங்குதான் வசிக்கின்றனர். இதுவரை காலமும் அரசியலுக்காக இங்கிருந்த வினோ, இப்போது கட்சித் தலைமையின் நேர்மையற்ற அரசியலால் விரக்தியடைந்து, விசனமடைந்து தேர்தல் அரசியலை முற்றாகக் கைவிட்டு ஒதுங்கி தனது குடும்பத்தினருடன் போய்விட முடிவு செய்திருக்கின்றார். அதற்காகவே அவர் லண்டன் புறப்படுகின்றார். போனால் அவர் உடனடியாகத் திரும்பிவரமாட்டார். இதனை நன்கு தெரிந்துகொண்ட கட்சித் தலைவர்கள் இன்றைய கூட்டத்தை மழை, வெள்ளத்தின் மீதுபழியைப்போட்டு ஒத்திவைத்துவிட்டார்கள்.

இனி, டிசெம்பர் 5க்கு முன்னர் மீண்டும் தலைமைக் குழுக் கூட்டத்தையாவது கூட்ட வினோ அழுத்தத்துக்கு மேல் அழுத்தம் கொடுக்கவேண்டும். இல்லையேல் தனது லண்டன் பயணத்திற்கான விமான ரிக்கெட் திகதியை மாற்றிவிட்டு கூட்டத்திற்காகக் காத்திருக்கவேண்டும். அதிலும் ஒரு சிக்கல் இருக்கின்றது. வினோவை நேரில் சந்திக்க அச்சப்படும் தலைமை, எப்போது கூட்டத்தைக் கூட்டுவார்கள் என்று தெரியாமல் எப்படி விமான டிக்கெட் திகதியைப் பிற்போடுவது என்பதுதான் அந்தச் சிக்கல். வினோ லண்டன் செல்லும் வரைக்கும் கூட்டத்தை நடத்தாமல் விட்டால் தமது எதிரணியின் பலத்தைக் குறைத்துவிடலாம் என்று ரெலோ தலைமை கருதுகின்றது.

தலைமைக்கு நெருக்கமாக பல ஆண்டுகளாகச் செயற்பட்டதன் காரணமாக அவர்களது அடி முதல் நுனி வரை அனைத்து தகிடு தத்தங்களும் வினோவுக்குத் தெரியும். அவர் குற்றச்சாட்டுக்களை அடுக்கினால் அவற்றை மறுக்க முடியாது, அது பின்னர் கட்சிக்குள் பேராபத்தாக முடிந்துவிடும் என்பதுதான் அவரைத் தவிர்த்து விட்டு மற்றவர்களைச் சமாளிக்க கட்சித் தலைமை அவசரப்படுவதற்கான காரணம்.

வினோ இங்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்தத் தடவை கட்சித் தலைமையை விடுவதில்லை என்பதில் கிளர்ச்சிக் குழுவின் மற்றைய உறுப்பினர்கள் உறுதியாக நிற்பதால் ஆபத்து கழுத்து மேல் கத்தியாகத் தொடர்ந்தும் தொங்கிக் கொண்டேதான் இருக்கும்போல் தெரிகின்றது.

ரெலோவின் இந்த உள்வீட்டு விவகாரங்களைவாசித்துவிட்டு நண்பர் ஒருவர் அழைப்பெடுத்து, "ஐக்கிய தேசியக் கட்சியை ரணில் விக்கிரமசிங்க ஒன்றுமில்லாத, ஒரு பொதுத் தேர்தலில் கூ-டநிற்கமுடியாத கட்சியாக ஆக்கியதைப் போல, செல்வமும் ரெலோவை அடியோடு அழித்து ஒழித்துவிடாமல் ஓயமாட்டார் போல இருக்கிறதே. அதற்கு கொள்ளிஎடுத்துக்கொடுக்கும் மந்திரிகள் போலச் சிலரையும் சேர்த்துவைத்துக்கொண்டிருக்கிறார் போலுள்ளதே'' என்றார். கட்சியின் இளையவர்கள் கையாலாகாதவர்களாக இருந்தால் அதுதான் நடக்கும் என்றேன் நான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வெளிநாட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தொடர்பில் சீனாவுக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் எதுவும் இல்லை, இலங்கை ஒரு சுதந்திர நாடாக மாறுவதற்கும், வெளிநாடுகளின் அழுத்தங்களைத் தாங்குவதற்கும் சீனாவின் ஆதரவு பயனுள்ளதாக இருக்கும்.

புதிய ஆளும் தரப்பைத் தெரிவு செய்ததன் மூலம் இலங்கை புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளது. இலங்கையின் எதிர்காலம் குறித்து சீனா வலுவான நம்பிக்கை கொண்டுள்ளது.

சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக் கடற்கரைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்க கடந்த ஆளும்தரப்பு நிராகரித்ததன் மூலம் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவில் பாதிப்பு ஏற்பட்டது. சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பலமான உறவுகள் இருந்தும் கடந்த ஆளும்தரப்பு இவ்வாறான நிலைப்பாட்டை எடுத்தமையே இதற்குக் காரணம். ஆனால், இலங்கை நிராகரித்த கோரிக்கைக்கு மாலைதீவு ஆளும்தரப்பு அனுமதி வழங்கியது.

இலங்கைக்கு இலாபம் இல்லாத ஆனால் அதிகளவு செலவாகும் திட்டங்களுக்கு சீனா பணம் செலவழிப்பதாக சில தரப்பினர் குற்றம் சுமத்திய போதிலும், கடந்த ஆளும்தரப்புகளின் கோரிக்கைக்கு அமைவாகவே சீனா அந்தத் திட்டங்களுக்கு பணத்தை பயன்படுத்தி-யது.

முந்தைய ஆளும்தரப்புகள் கோரியபடி அதிகப் பணம் செலவழிக்கும் திட்டங்களில் சீனா பணத்தை முதலீடு செய்யும்போது, அந்தத் திட்டங்களால் லாபம் பெறுவது எப்படி என்பதை அந்த ஆளும்தரப்புகளே தெரிந்து வைத்திருக்கவேண்டும் - என்றார்.

## 141 இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசு மற்றும் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களுக்கு அமைய, இந்த ஆண்டு 351 இந்திய கடற்றொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது 96 இந்திய கடற்றொழிலாளர்கள் சிறைத்தண்டனை பெற்று வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய நகரங்களில் காணப்படும் இந்திய துணை உயர்ஆணையகங்களின் ஊடாக இந்திய கடற்றொழிலாளர்களுக்கான சட்ட உதவிகள் வழங்கப்படுவதாகவும் இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் விடுவிக்கப்பட்ட 12 தமிழ்நாடு மீனவர்கள் நேற்று மீண்டும் நாடு திரும்பினர் என்று இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தின் ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 12 மீனவர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வெள்ளத்தால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை 4 லட்சத்து 63 ஆயிரத்து 569 ஆகும்.

இதேவேளை, தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் ஏற்பட்ட ஆழமான காற்றழுத்த தாழ்வு நிலையின் தாக்கம் நாட்டின் வானிலை அமைப்பில் நேற்றைய தினத்தின் பின்னர் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்திருந்தது. ஆனால், விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை அறிவிப்புக்கள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள ஆழமான காற்றழுத்த தாழ்வு நிலை அடுத்த சில மணி நேரங்களில் புயலாக உருவாகி தமிழகத்தின் கரையை நோக்கி நகரும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நுணாவில் பொது நூலக ஊழியர் உட்பட இருவர் பொலிஸால் கைது

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலகத்தில் வைத்து அயலவரின் மேச்சலுக்காக கட்டப்பட்ட பசு மாட்டைத் திருடி இறைச்சியாக்கி விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பொதுநூலக ஊழியர் உட்பட்ட இருவர் அப்பகுதி இளைஞர்களால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

புதன்கிழமை நுணாவில் பொதுநூலகத்திற்கு அருகில் உள்ள காணியில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்ட பசுமாடு காணமல் போயிருந்தது. பசுவின் உரிமையாளரும் அப்பகுதி இளைஞர்கள் சிலரும் நேற்றுப் பகல் தேடுதல் நடத்தியபோது நூலக மதிலுக்கு அருகில் பசுமாட்டின் தலை உட்பட்ட பாகங்களைக் கண்டுள்ளனர்.

இதையடுத்து நூலகத்துக்குள் நுழைந்து பார்த்தபோது நூலக குளியலறைக்குள் வைத்து பசுவினை இறைச்சியாக்கிய இரத்தக்கறைகளைக் கண்டுள்ளனர்.

இதனால் நூலக ஊழியர் மீது சந்தேகமடைந்த இளைஞர்கள் ஊழியரை விசாரித்த பொழுது இன்னொருவருடன் இணைந்து புதன்கிழமை கடமை நேரத்தில் மதியம் 1.00 மணியளவில் பசுவினை இறைச்சியாக்கியதை அவர் ஒப்புக்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து மற்றையவரையும் பிடித்த இளைஞர்கள் நூலகத்தை உடனடியாகவே மூடி சாவகச்சேரி பொலிஸாரிம் முறைப்பாடு செய்து இருவரையும் ஒப்படைத்துள்ளனர்.

இருவரையும் கைது செய்த பொலிஸார் இன்றுதினம் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர்.

இந்நிலையில் சாவகச்சேரி நகரசபை நூலக ஊழியர் பசுமாட்டைத் திருடி இறைச்சியாக்கி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விடயம் வெளியில் தெரிந்தால் நகரசபையின் பெயருக்கு அவதூறு ஏற்படும் என தெரிவித்து இளைஞர்களோடு சமரச முயற்சியில் ஈடுபட நகரசபை அதிகாரிகள் சிலர் முயன்றபோதும் இளைஞர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. இப்படியான ஊழியர்கள் பணியில் இருந்து நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# பூசகரிடம் கொள்ளையிட்ட மூவர் பொலிஸால் கைது

கைதடியில் உள்ள கௌரி அம்மன் ஆலயத்தில் பூசாரியை கத்தியால் வெட்டிக் கொள்ளைஇட்டார்கள் என்ற சந்தேகத்தில் பெண் உட்பட மூவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேகநபர் ஒருவர் கற்கோவளம் பகுதியில் வைத்து கைது வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மேலும் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டதுடன், கொள்ளையிடப்பட்ட நகை பணம் என்பவற்றைத் தாம் மீட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

புதன்கிழமை(27) நண்பகல் மழை பெய்து கொண்டிருந்ததை சாதமாக பயன்படுத்தி கைதடி ஆலய மடப்பள்ளியில் இருந்த பூசகரிடம் இருவர் கத்தியைக் காட்டிக் கொள்ளையடித்தனர். பேருந்து ஒன்றில் வந்திறங்கிய அவர்கள் இருவரும் பூசகரை கத்தியால் வெட்டி நகை மற்றும் பணத்தை கொள்ளையிட்டிருந்தனர்

பூசகரின் அலறல் சத்தம் கேட்டு அங்கு வந்த அயலவர்கள் ஆலயத்தில் சந்தேகத்திற்கிடமாக நின்ற பெண் ஒருவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சி.சி.டி.வி கேமராக்களின் அடிப்படையில் விசாரணைகளை பொலிஸார் கொள்ளையர்களை அடையாளம் கண்டு அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் இயங்கும் காங்கேசன்துறை பிரிவின் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் நேற்று வியாழக்கிழமை(28) இச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவரை பருத்தித்துறை கற்கோளம் பகுதியில் வைத்து கைது செய்தனர்.

அவர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மற்றைய நபரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட 40 ஆயிரம் ரூபாய் பணமும் பூசகரின் சங்கிலியை விற்றுப் பெறப்பட்ட 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பணமும் அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் விற்கப்பட்ட சங்கிலியும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டுள்ள மூவரும் கற்கோவளம் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

# யுனிசெவ் பிரதிநிதி பிரதமருடன் சந்திப்பு

யுனிசெவ் எனப்படும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹன்னன் சுலைமான் பிரதமர் ஹரினி அமரசூரியவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்த கலந்துரையாடலின் போது, நாட்டின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகப் பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் போசாக்கின்மை, கல்வி உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## வழங்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிர ஏனைய அனைவரும் கள்வர்கள் என்பதையே மக்கள் மனதில் பதியச் செய்துள்ளனர். ஏனைய அரசியல்வாதிகள் அனைவரையும் கள்வர்களாக்கியுள்ளனர். ஆனால் இன்று அவர்கள் என்ன செய்கின்றனர்? 50 ஆயிரம் ரூபாய் டிக்கெற் பெற்று இசை நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர். இவர்களது ஆட்சியைப் பார்க்கும்போது ரஷ்ய ஆட்சியே நினைவுக்குவருகிறது. அந்த இசைநிகழ்ச்சியில் பங்கேற்க ஒரு மேசைக்கு 5 இலட்சம் ரூபாவாகும். இவர்கள் 10 இலட்சத்துக்கு இரு மேசைகளை முன்பதிவு செய்திருக்கின்றனர்.

அந்த 10 இலட்சம் ரூபாவில் வறுமையிலுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கியிருக்கலாமல்லவா? நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அதிசொகுசு வாகனங்களைப் பயன்படுத்துவதாகக் கூறினர். ஆனால் இன்று அவர்களும் அதே வாகனங்களையே பயன்படுத்துகின்றனர். நல்லாட்சிக் காலத்தில் எவருக்கும் புதிய வாகனங்கள் வழங்கப்படவில்லை.

முறைமை மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறியவர்கள் இதுவரை அதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. தாம் பதவிகளை ஏற்றாலும் பேரூந்திலேயே நாடாளுமன்றம் வருவோம் என்றும், வீட்டிலிருந்து உணவு கொண்டு வருவோம் என்றும் கூறியவர்கள் இன்று அதனைப் பின்பற்றுகின்றனரா? என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 9 புதிய தூதுவர்கள் ஜனாதிபதியிடம் நற்சான்று பத்திரங்கள் கையளிப்பு



இலங்கைக்குபுதிதாகநியமனம்பெற்றுள்ள ஒன்பது தூதுவர்களும் உயர்ஸ்தானிகர் ஒருவரும் வியாழக்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் நற்சான்று பத்திரங்களை கையளித்தனர்.









அதன்படி புர்கினா பாசோ, பொஸ்னியா மற்றும் எர்செகோவினா , அசர்பைஜான் குடியரசு, ஜோர்ஜியா, பெலரூஸ் குடியரசு, ஆர்மேனியா குடியரசு, ஸ்பானிய குடியரசு, கொங்கோ குடியரசு மற்றும் கினியா குடியரசு ஆகியவற்றின் புதிய தூதுவர்களும் கென்யாவின் புதிய உயர்ஸ்தானிகரும் இவ்வாறு நியமனம் பெற்றுள்ளனர்.

நற்சான்று பத்திரங்களை கையளித்த தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகரின் விவரம் வருமாறு:

01.கலாநிதி டிசையர் போனிபஸ் சம் புர்கினா பாசோ தூதுவர் (புதுடில்லி)

02. ஹரிஸ் ஹெர்லே - பொஸ்னியா மற்றும் எர்செகோவினா தூதுவர் (புதுடில்லி)

03. எல்சின் ஹூசைன்லி - அசர்பைஜான் குடியரசு தூதுவர் (புதுடில்லி)

04.வக்தாங் ஜவோஷ்விலி - ஜோர்ஜிய தூதுவர் (புதுடில்லி)

05.மிகஹல் கஸ்கோ - பெலரூஸ் குடியரசின் தூதுவர் (புதுடில்லி)

06.வாகன் அப்யான் - ஆர்மேனியா குடியரசு தூதுவர்

07.யுவான் அன்டோனியோ மார்ச் புஜோல் - ஸ்பானிய குடியரசின் தூதுவர் (புதுடில்லி)

08. ரேமண்ட் செர்ஜ் - கொங்கோ குடியரசு (புதுடில்லி)

09.முன்யிரி பீட்டர் மைனா - கென்யா குடியரசு உயர்ஸதானிகர் (புதுடில்லி)

10. அலசேன் கொண்டே - கினியா குடியரசின் தூதுவர் (புதுடில்லி)

# தேசிய ஐக்கியம், நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

## பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் தெரிவிப்பு

இன ரீதியில் பிளவுபட்டு பிரிந்து செயற்படாமல், இலங்கையர்கள் என்ற நோக்காகக்கொண்டு இணைந்து செயற்படுவதன் மூலம் நாடு என்றவகையில் எமக்கு முன்னோக்கிச்செல்ல முடியும் என தேசிய ஒருமைப்பாடு பிரதி அமைச்சர் மொஹமட் முனீர் முழப்பர் தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாடு பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்ட மொஹமட் முனீர் முழப்பர் வியாழக்கிழமை இராஜகிரியவில் அமைந்துள்ள தேசிய ஒருமைப்பாடு பிரதி அமைச்சு காரியாலயத்தில் கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

இனங்களுக்கிடையில் ஐக்கியம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பாரிய பணியை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக தேசிய ஒருமைப்பாடு பிரதி அமைச்சு பதவியை வழங்கியமை தொடர்பில் ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளும் அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற மக்கள் ஆணை ஊடாகவே அனைவரும் இலங்கையர்கள் என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. இன ரீதியில் பிளவுபட்டு பிரிந்து செயற்படாமல், இலங்கையர்கள் என்ற நோக்காக்கொண்டு இணைந்து செயற்படுவதன் மூலம் நாடு என்றவகையில் எமக்கு முன்னோக்கிச்செல்ல முடியும்.

தேசிய ஐக்கியம் மற்றும் மத நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் செயற்படுவதைஒருபொறுப்பாக கருத வேண்டும். இலங்கையர்கள் என்ற உணர்வு கடந்த காலங்களில் மக்களிடமிருந்து தூரமாகியே இருந்தது. கடந்த காலங்களில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் உண்மையைத் தேடும் பொறுப்பு எங்களிடம் இருக்கிறது.

உண்மையைத் தேடுவதன் ஊடாக நீதியை நிலைநாட்ட வேண்டும். தேசிய ஐக்கியம் நல்லிணக்கத்தைக்கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

எனவே இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஊடகங்களுக்கு பாரிய பொறுப்பு இருக்கிறது. வளமான நாடு அழகான வாழ்க்கையைக் கட்டியெழுப்ப தேசிய ஒருமைப்பாடு மிகவும் முக்கியமாகும். - என்றார்.

இந்நிகழ்வில் சர்வமத தலைவர்கள், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, அமைச்சின் மேலதிக செயலாளர் ரோஹன ஹபுகஸ்கந்த, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் மேலதிக செயலாளர் (தேசிய ஒருமைப்பாடு) குஹநாதன் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

# வாகன இலக்கத் தகடுகள் விநியோகம் மீள ஆரம்பம்

## மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் அறிவிப்பு



வாகன இலக்கத் தகடுகளை விநியோகிக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பணத்தைச் செலுத்தி வாகன இலக்கத் தகடுகளைக் கொள்வனவு செய்ய முடியும்.

எனவே, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக வாகன இலக்கத் தகடுகளின் பயன்பாடு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

அதற்கு பின்னர் தற்காலிக வாகன இலக்கத் தகடுகளைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தொடர்ந்தும் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள 2 ஆயிரத்து 723 பாதுகாப்புப் படையினர்





சீரற்ற காலநிலையால் நாடளாவிய ரீதியில் 4 லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளநிலையில்முப்படையினர் மற்றும் பொலிஸார் தொடர்ந்தும் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். 2723 பாதுகாப்பு படையினர் மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை 105 இராணுவ படகுகளும், 107கடற்படை படகுகளும்,20விமானப்படை படகுகளும் மற்றும் 7 பொலிஸ் படகுகளும் மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 80 இராணுவ குழுக்கள் மற்றும் 130 கடற்படை குழுக்கள் இப்பணிகளில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளைவிமானப்படையின்6உலங்கு வானூர்திகளும், இராணுவத்தின் 64 கனரக வாகனங்களும், 40 டிரக்டர்களும் மீட்பு மற்றும் நிவாரணம் வழங்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

2080 இராணு வீரர்கள், 520 கடற்படை வீரர்கள், 80 விமானப்படை வீரர்கள் மற்றும் 43 பொலிஸார் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பலமிக்க சக்திகளின் நடுவில் தமிழர்களும்

வெளிநாட்டு அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணியக் கூடாது, குறிப்பாக நாட்டின் பொருளாதார நிலைமையை சில தரப்பினர் பயன்படுத்திக் கொள்ள முயலும்போது, இலங்கை சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையைப் பேண வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார் இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்ஹொங்.

கொழும்பில் வியாழக்கிழமை ஊகப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய நிலையில் அவரது இந்தக் கருத்து வந்துள்ளது. சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதை ரணில் தலைமையிலான ஆட்சி தடுத்து நிறுத்தியதையும் இந்தச் சந்திப்பில் குறிப்பிட்ட சீனத் தூதுவர், அந்த முடிவு இரு நாடுகளின் உறவுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

தூதுவரின் கருத்து திடீரென்று வரவில்லை. இந்தியா 3 ஆயிரத்து 500 கிலோ மீற்றர்கள் சென்று தாக்கக்கூடிய பலஸ்டிக் ஏவுகணையைத் தனது தயாரிப்பான புதிய நீர்மூழ்க்கியில் இருந்து ஏவு வெற்றிகரமாகச் சோதித்த மறுநாளில் சீனத் தூதுவரின் கருத்து வெளிப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியான காலத்தில் இந்தியா பல உதவிகளை இலங்கைக்கு வழங்கியது என்பது எல்லோருக்கும் தெரியும். இதனால் தனது பாதுகாப்பு விடயத்தில் இந்தியா இலங்கையிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறது என்பதும் வெளிப்படையானது. சீனத் தூதரின் கருத்து இலங்கை இந்தியாவிற்கு அடிபணியாத சுதந்திரமான அயலுறவுக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்பதாகத்தான் கொள்ள முடியும். அதிலும் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவிற்குச் செல்லவுள்ள நிலையில் சீனத் தூ-தர் இதனை வலியுறுத்தியிருக்கிறார்.

ஒரு நாள் முன்னதாகத்தான் இந்திய கடற்படை புதிதாக இணைக்கப்பட்ட அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் அரிகாட்டில் இருந்து கே-4 பாலிஸ்டிக் ஏவுகணை சோதிக்கப்பட்டது. இலங்கையின் வடக்கு கடற்கரையிலிருந்து அருகில் இருக்கக்கூடிய விசாகப்பட்டினத்தில் 2023 ஒகஸ்ட் மாதம் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது இந்த அரிகாட் அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பல். இதிலிருந்தே 3,500 கி.மீ தூரம் பறந்து சென்று இலக்கைத் துல்லியமாகத் தாக்கக்கூடிய ஏவுகணையைப் பரிசோதித்தது. இந்தச் சோதனை மூலம், இந்தியா தனது அணுஆயுதத் தடுப்பு திறன் மேம்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தியா ஏவுகணை சோதனை நடத்துவதற்கு சில வாரங்களுக்கு முன்பு, சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலில் நுழைந்து ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கின, மலாக்கா ஜலசந்தி வழியாக அவை திரும்பி வந்தன. வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்கள் மீதான இலங்கையின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைக்காலம் மார்கழி மாதத்துடன் முடிவடையும் நிலையில், சீனத் தூதுவரின் கருத்து முக்கியத்துவம் பெறுகிறது. சீன ஆய்வுக் கப்பல்களின் வருகை மீண்டும் இலங்கை ஆளும் தரப்புக்குச் சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும்.

இதற்கு மத்தியில் மேற்கு நாடுகளும் இந்து மா கடலில் தமது ஆர்வத்தை அதிகரித்திருக்கின்ற. அவற்றிக் வானூர்தி தாங்கிக் கப்பல்கள் இந்து மா கடலில் சுற்றுக் காவல் பயணங்களில் ஈடுபடப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்து மா கடலில் அதிகரித்துவரும் சீனாவின் நடவடிக்கைகளால் கவலையடைந்திருக்கும் இந்தியா மற்றும் நண்பர்களின் பதில் நடவடிக்கையாகவே இவற்றையும் பார்க்க வேண்டியிருக்கின்றது.

இந்தப் போக்குகள் இலங்கையின் எதிர்கால அரசியல் கடும் சவால் நிறைந்ததாக இருக்கும் என்பதை எதிர்வுகூறுகின்றன. இது இலங்கைக்கு மட்டுமல்ல தமிழர்களுக்கும் அவர்களுக்கான அரசியல் தீர்வுக்கும் கூட கடுமையான அரசியல் அழுத்தங்களைத் தரும் நகர்வுகளாகவே இருக்கப்போகின்றன. புதிய ஆளும் தரப்பு இதனை எப்படிச் சமாளிக்கப்போகின்றது, அதற்கேற்ற வகையில் தனது புதிய அயலறவுக் கொள்கைகளை எப்படி வடிமைக்கப்போகின்றது என்பதில் தமிழ் அரசியல் மிகக் கவனமாகச் செயலாற்றுவது அவசியம்.

# ஆசையை ஒழித்தல்

அருணன் கபிலன்

உலகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு உணவு, உறைவிடம் போன்ற பொதுவான அடிப்படைத் தேவைகள் உள்ளன. இவை புறத்தேவைகள். இதுபோலவே அகத்தேவைகளும் உண்டு. அந்த அகத்தேவைகளைத் தேவைக்கும் அதிகமாகத் தூண்டுவதுதான் ஆசை என்னும் அவா.

ஆசைதான் இந்த வாழ்வை நடத்திச் செல்கின்றது என்றாலும் ஆசையை விட்டொழிப்பதே வாழ்வின் குறிக்கோளாகச் சுட்டப்படுவது விந்தையான முரண். ஆழ்கடலில் எழுகின்ற அலைகள் எவ்வாறு ஓடங்களையும் மரக்கலங்களையும் பெரிய கப்பல்களையும் கூட ஆட்டுகின்றனவோ அதுபோலவே இந்த வாழ்க்கை என்னும் பெருங்கடலில் ஆசை என்னும் அலைகள் நம்முடைய மனத்தைப் பற்றி ஆட்டுகின்ற ஆட்டம் சொல்லி மாளாது.

இதில் வேடிக்கை என்னவெனில், தங்களின் துன்பங்களுக்கெல்லாம் மூல காரணம் ஆசைதான் என்பதை அறியாமலேயே மனிதர்கள் ஆசைக்கடலில் அகப்பட்டு உழல்கிறார்கள். ஆசை என்பது முடிவில்லாத, அடங்க மறுக்கிற அதிபேருணர்ச்சி. ஒன்றிலிருந்து ஒன்றாகக் கிளைவிட்டு வளர்ந்து, தான் தோன்றிய இடத்தையே அழித்து விடக் கூடிய தன்மையுடையது ஆசை.

தேவயானியை ஏமாற்றியதற்காக, அசுர குருவான சுக்கிராச்சாரியாரிடம் தனது நடுவயதிலேயே மூப்பு அடையும் சாபத்தைப் பெற்றான் யயாதி. தன்னுடைய பிழைக்காக மன்றாடி மன்னிப்புக் கேட்டும் சுக்கிராச்சாரியார் யயாதிக்கு இரங்கவில்லை. முடிவில் மருமகனாயிற்றே என்ற காரணத்தினால், ‘நீ முதுமை எய்துவாய் என்ற சாபத்தை நான் திரும்பப் பெற முடியாது. ஆனால், உன்னுடைய முதுமையை நீ மாற்றிக் கொள்ளலாம். இளம் வயதுடைய ஒருவன் தன்னுடைய இளமையை உனக்குத் தந்து உன்னுடைய இந்த முதுமையை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தால் இச்சாபம் தணியும்’ என்றார்.

ஒருவழியாய் மனந்தேறிய யயாதிக்கு இவ்வாறு சாபம் பெற்றும் ஆசை மட்டும் அறுபடவேயில்லை. எப்படியாயினும் இக்கொடிய முதுமையை மாற்றி விட வேண்டும் என்று முயன்றான். தன்னுடைய முதுமையைப் பெற்றுக் கொண்டு இளமையைத் தருபவர் யார் இருக்கப் போகிறார்கள்? என்று சிந்தித்தான். அவனுக்கு நற்குணங்களையுடைய ஐந்து மகன்கள் இருந்தார்கள். அவர்களை அழைத்து யயாதி, “புதல்வர்களே, உங்கள் பாட்டன் சுக்கிராச்சாரியாரின் சாபத்தினால் இவ்வாறு முதுமையடைந்தேன். நான் வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்கவில்லை. என்னுள் ஆசை இன்னும் துளிர்விட்டுக் கொண்டேயிருக்கிறது. ஆதலால் உங்களில் யாரேனும் ஒருவர் இளமையைத் தந்தால் இந்த அரசபோகம் அனைத்தையும் உங்களுக்குத் தருகிறேன்” என்று வேண்டினான்.

முதல் நான்கு மகன்களும் அரச போகத்தின் சுகத்தை விடவும் முதுமையின் கொடுமையைக் கண்டு அஞ்சியே அவனுடைய கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டனர். கடைசி மகனான புரு என்பவன் மட்டும் தந்தைக்காக இரங்கி முதுமையைப் பெற ஒத்துக் கொண்டான். பல்லாண்டுகள் சுகபோகங்களில் திளைத்துச் சலித்துப் போன யயாதி மீண்டும் புருவிடம் வந்து, “காமத்தைத் தீர்ப்பதற்கு வாயிலே கிடையாது. எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றுகிறபோது அது எத்தனை வேகமாக மூண்டெரியுமோ, அதுபோல ஆசை ஒருபோதும் நம்மைத் திருப்தியடையச் செய்யாது. இவற்றையெல்லாம் முன்பே கற்றிருந்தும் உணராதிருந்தேன். ஆனால் இப்போது முழுமையாக உணர்ந்து கொண்டேன். இனிமேல் உன்னுடைய இளமையை நீ திரும்பப் பெறு” என்று கூறிவிட்டுப் புருவிடம் மீண்டும் கேட்டான் -“உன் அண்ணன்கள் எல்லாரும் மறுத்துவிட்ட வேளையில் நீ மட்டும் எப்படி முதுமையை ஏற்க ஒத்துக் கொண்டாய்?”

அதற்குப் புரு, ‘‘இத்தனை ஆண்டுகள் சுகபோகங்களில் நீந்திக் களித்து எங்கள் ஐவரைப் பெற்றும், முதுமைச் சாபத்தினை அடைந்த பிறகும் கூட உம்முடைய ஆசை வெறி தணியவில்லையே. இப்படிப்பட்ட ஆசையை இளையவனாகிய நான் மட்டும் எப்படித் தணிக்கப் போகிறேன் என்று எண்ணி, அந்த ஆசையைவிட்டு விலகி விட விரும்பினேன். அதுதான் காரணம்” என்றானாம்.

தந்தை பட்டு உணர்ந்து தெளிந்ததை மகன் உற்று உணர்ந்து முன்பே தெளிந்துவிட்டான். ஆசை என்னும் மாயம் மனத்தை எப்போதும் பற்றியிழுத்து அறியாமை என்னும் படுகுழியிலே தள்ளும்.

மண்ணாசையினால் கலிங்கத்தின்மீது படையெடுத்து வெற்றிகொண்ட மௌரியப்பேரரசன் அசோகன் போர்க்களத்திற்கு வெற்றி நடையோடு பவனி வருகிறான். எதிரே ஒரு காட்டுமிராண்டி மிரண்டு போய் நிற்கிறான். அசோகனுடைய படைவீரர்கள் அவனை விலகிப் போகச் சொல்லி எச்சரிக்கிறார்கள். அவன் அதைப் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை.

குழம்பிப் போயிருக்கும் அவனைப் பார்த்து அசோகன் கேட்டான், “நீ யார்?”

அவன் கூறினான் - ‘‘நான்தான் என்னுடைய கூட்டத்திலேயே மிகவும் பலசாலி என்றும், மூர்க்கமானவன் என்றும் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆண்டிற்கு இரண்டு மூன்று மனிதர்களை உயிரோடே பிடித்துத் தின்றுவிடுவேன். அதனால் அப்படி நினைத்துக் கொண்டிருந்தேன். இங்கு வந்து பார்த்த பின்னால் அது பொய்யாகிப் போனது. ஏனென்றால், என்னைவிடப் பலமுடைய காட்டுமிராண்டி யாரோ ஒருவன் இருக்கிறான். இத்தனை மனிதர்களைக் கொன்று போட்டிருக்கிறான். அவன் எப்படி இந்த உடல்களைத் தின்னப் போகிறான் என்பதைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கிறேன்!” என்றான்.

அப்போதே அசோகன் இடையிலே தரித்திருந்த உடைவாளை உருவித் தூர எறிந்துவிட்டுத் தன்னுடைய மண்ணாசைக்காகவும் போர் வெறிக்காகவும் மன்னிப்புக் கேட்டு, தன் படைகளை அமைதித்தூதுவர்களாக மாற்றிவிட்டான். ஆசையை ஒழிக்கச் சொன்ன புத்தரின் போதனைகளை இந்த உலகம் முழுவதும் பரப்பத் தொடங்கினான்.

புத்தர் தன் ஞானமாய்ப் பெற்ற உண்மை இவை; ‘துன்பம்தான் வாழ்க்கையின் அடிநாதம். துன்பத்தைவிட்டு மனிதன் விலக முடியாது. அந்தத் துன்பத்திற்கு முதலாக விளங்குவதே ஆசைதான். ஆதலால் ஆசையைவிட்டு விலகி வாழ்வதே துன்பத்திலிருந்து நீங்கிக் கொள்ளும் உயர்வுடையது’ என்பதுதான்.

என்றோ, விடுதல் என்றோ, நீக்குதல் என்றோ சுட்டாமல் திருவள்ளுவர் ‘அறுத்தல்’ என்றார். அதையே திருமூலரும் ‘அறுமின்கள்’ என்றார். ஏனென்றால் ஆசையை வித்து என்று குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். ஆதலால் அது தாவரத்தைப் போல வேருள்ள வரையிலும் துளிர்த்துக் கொஆசையை ஒழித்தல் ண்டேயிருக்கும். எனவே அதனை அடியோடு அறுத்து விட வேண்டும் என்றார்கள் ஞானியர்.

‘எனக்கு அவரைத் தெரியும், இவரைத் தெரியும்’ என்று இறுமாப்புற்று நாம் எத்தனை பெரிய ஆட்டம் போடுகிறோம். மண்ணாசையாலும் பொன்னாசையாலும் பெண்ணாசையாலும் இந்த வாழ்க்கையை நிறைவு செய்து விட்டதாகக் கெக்கலிக்கிறோம். பொன்னையும் பொருளையும் கொட்டிக் குவித்து வைத்துக் கொண்டு ராஜபோகங்களில் திளைப்பதாகக் கருதுகிறோம். ஆனால் திருமூலர் எச்சரிக்கிறார், ‘ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்’ என்று.

‘அமைச்சனல்ல, அரசனல்ல, ஈசனே உன் பக்கம் இருக்கிறான் என்றாலும் ஆசையை அறுத்து விடுங்கள். அவ்வாறில்லாமல் நீங்கள் ஆசைப்பட ஆசைப்பட துன்பங்கள் மேன்மேலும் வந்து உங்களைச் சூழ்ந்து கொள்ளும். அதற்கு மாற்றாக ஆசையை விடுகிறபோது பேரானந்தத்தை எய்தலாம்’ என்பது அவர் கருத்து.

உலகத்தையே தன்னுடைய மண்ணாசையினால் வென்றுவிட நினைத்த அலெக்சாண்டர், இறுதிக் காலத்தில் படைத் தளபதிகளிடம் தன்னுடைய கடைசி ஆசைகளாகச் சில கோரிக்கைகளை வைத்தான். ‘எனது சவப்பெட்டியை மருத்துவர்கள்தான் சுமந்து வர வேண்டும்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஆசையை ஒழித்தல்

4ம் பக்கத் தொடர்ச்சி...........

என்னுடைய இறுதி ஊர்வலம் செல்கின்ற பாதையில் நான் ஈட்டிய சொத்து முதலிய பொருட்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும். என்னுடைய சவப்பெட்டிக்கு வெளியே இரண்டு கைகளும் தெரியுமாறு இருக்க வேண்டும்' என்பவைதான் அந்தக் கோரிக்கைகள்.

தளபதிகளுக்கு வியப்பு. எதனால் அவன் அப்படி விரும்புகிறான் என்று கேட்டதற்கு அலெக்சாண்டர், "எத்தனை கோடி செல்வங்கள் இருந்தாலும் எந்த மருத்துவராலும் ஒரு மனிதனை – அது அலெக்சாண்டரானாலும் கூட – மரணத்திலிருந்து காப்பாற்ற முடியாது என்பதற்காக என்னுடைய சவப் பெட்டியை மருத்துவர்கள் சுமக்க வேண்டும் என்கிறேன். இத்தனை பெரிய உலகத்தையே தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்ட மண்ணாசை மிக்க எனக்கு இவ்வளவு சொத்துகளும் பொருள்களுமிருந்தும் கடைசிக் காலத்தில் உதவவில்லை என்பதை அறிவிக்கத்தான் அவற்றை வரிசைப்படுத்தச் சொல்கிறேன். அதுபோலவே தன்னுடைய கையசைவில் பல்லாயிரம் வீரர்களை ஆட்டுவித்த வல்லமை மிக்க இந்த அலெக்சாண்டர் வெறுங்கையோடுதான் செத்துப் போனான் என்பதைக் காட்டவே என்னுடைய கைகளைச் சவப்பெட்டிக்கு வெளியே தெரியுமாறு வைக்கச் சொல்கிறேன்' என்றான்.

இந்த உலகத்தின்மீது நாம் கொள்ளும் பேராசை என்பது ஒரு நீர்க்குமிழி இந்த உலகைப் பிரதிபலிப்பது போலானது. ஆசை தோன்றுகிறபோது 'ஆ' என்று வியப்பைத் தரும். ஆனால் அது நிறைவுறாது நீள்கிறபோது 'சை' என்று சலிப்பையே மிச்சமாக்கும்.

நாம் பெரும்பாலும் உடலையும் சுற்றுப்புறத்தையும் அழகாக வைத்துக் கொள்வதையே தூய்மை என்று எண்ணுகிறோம். உண்மையில் அவையெல்லாம் புறத்தூய்மைதான். மெய்த்தூய்மை என்பது நம்முடைய மனத்திலிருந்து ஆசையை அகற்றி விடுவதுதான். உள்ளத் தூய்மைக்கு ஒரே வழி ஆசையை அறவே அறுத்து விடுவதுதான். ஆசையறுபட்ட மனிதர்களால் நிறைகிற இந்தச் சமூகம் மேன்மேலும் உயர்ந்தோங்கும். உலக மேன்மைக்கு வழிகாட்டும். போர்கள் ஒழிந்து புன்மைகள் தீரும். ஆசைகளை அறுப்போமே.

# டுபாயில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி பண மோசடி செய்த பெண் கைதானார்

டுபாயில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்து இரண்டு ஆண்டுகள் தலைமறைவாக இருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபரான பெண் வத்தளை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பெண் டுபாயில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி அம்பாறை, பதுளை மற்றும் பிபில உள்ள பல்வேறு பிரதேசங்களில் 37 நபர்களிடமிருந்து 02 கோடியே 12 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், சந்தேக நபரான பெண் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கணவனால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு காயமுற்ற மனைவி சிகிச்சை பயனின்றி சாவு

கணவனால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த மனைவி சிகிச்சை பலனின்றி புதன்கிழமை காலை உயிரிழந்துள்ளார் என கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பதுளை, மீகஹகிவுல பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய மனைவி ஆவார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

உயிரிழந்த மனைவி கடந்த திங்கட்கிழமை மீகஹகிவுல நகரத்தில் தனது அலுவலகத்தை நோக்கி சென்று கொண்டிருந்த போது வீதியில் இருந்த கணவன் தனது மனைவியின் கை விரல்களை வெட்டியெடுத்து முகம் மற்றும் கழுத்துப் பகுதியைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, காயமடைந்த மனைவி மீகஹகிவுல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பின்னர், சந்தேக நபரான கணவன் கந்தகெட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பதுளை போதனா வைத்தியசாலையில் இரண்டு நாள்களாக சிகிச்சை பெற்று வந்த மனைவி புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தகெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# உயிர்நீத்த மத்ரஸா மாணவர்ளுக்கு சாய்ந்தமருதில் துஆப் பிரார்த்தனை



(அஸ்லம் எஸ்.மௌலானா)

மாவடிப்பள்ளி பாலத்தில் உழவு இயந்திரம் (ட்ரெக்டர்) கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் உயிரிழந்த மத்ரஸா மாணவர்ளுக்கு சாய்ந்தமருது ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசலில் விசேட துஆப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

வெள்ளிக்கிழமை குத்பா மற்றும் ஜூம்ஆத் தொழுகையைத் தொடர்ந்து மௌலவி எம்.எம். முபாறகால் இந்த துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.





சீரற்ற காலநிலை காரணமாக கடந்த 26 ஆம் திகதி திங்களன்று நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரிக்கு விடுமுறை வழங்கப்பட்டதையடுத்து சம்மாந்துறை பிரதேசத்தை சேர்ந்த மேற்படி கல்லூரி மாணவர்கள் சிலர் மாவடிப்பள்ளி பாலத்தின் ஊடாக பயணிப்பதற்காக ட்ரெக்டர் ஒன்றில் ஏறிச் சென்ற நிலையில் வெள்ளப் பெருக்கு காரணமாக அது கவிழ்ந்து விபத்துக்துக்குள்ளானது.

இதன்போது அதில் பயணித்த அனைவரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சில மாணவர்கள் உயிருடன் மீட்கப்பட்ட அதேவேளை எட்டுப் பேர் காணாமல் போயிருந்தனர். அவர்களில் இதுவரை 05 மாணவர்கள் உட்பட 07 பேர் உயிரிழந்த நிலையில் ஜனாஸாக்களாக மீட்கப்பட்டுள்ளனர். மற்றொரு மாணவரை மீட்கும் பணி தொடர்கிறது.

# புத்தளம் தில்லையடியில் இலவச மருத்துவ முகாம்

(சியாஜ்)

புத்தளம் தில்லையடி ஜனாஸா சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற உள்ள இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 2024 டிசெம்பர் முதலாம் திகதி புத்தளம் தில்லையடி அரபா நகர் உம்ராபாத் அன்சாரி பாடசாலையில் காலை 08 மணி தொடக்கம் பிற்பகல் 05 மணிவரை நடைபெற உள்ளது.

அரசின் அங்கீகாரத்துடன் 20 வருட அனுபவம் கொண்ட வைத்தியர் எஸ்.எம் றிஸான் தலைமையில் நடைபெற உள்ள இவ் இலவச மருத்துவ முகாமில் ஹோமியோபதி, அக்குபஞ்சர், ஹிஜாமா மற்றும் இயற்கை மருத்துவம் என்பன பல்வேறு மருத்துவ சேவைகள் வழங்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளம் உடைத்த நீர்க்குழாயிருக்கும் இடத்திற்கு பொறியியலாளர்கள் விரைவு

## திருத்த வேலைகள் ஆரம்பம்





(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் உடைக்கப்பட்ட பாரிய நீர்க்குழாய் இருக்கும் இடத்திற்கு நேற்று(வெள்ளிக்கிழமை) பகல் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொறியியலாளர்கள் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் அங்கு போய்ச் சேர்ந்தார்கள்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய பொறியியல் பிரிவுப் பொறியியலாளர் தாமோதரம் விநாயகமூர்த்தி , இயக்கமும்பராமரிப்பும்பிரிவிற்கான பொறியியலாளர் பாக்கியராஜா மயூரதன் மற்றும் காரைதீவு பிரதேச காரியாலய பொறுப்பதிகாரி பொறியியலாளர் விஜயரெத்தினம் விஜயசாந்தன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து நிலைமையை ஆராய்ந்தனர். நேற்று காலநிலை ஓரளவு சீராக இருந்ததால் அங்கு செல்ல முடிந்தது.

உடனடியாக திருத்த வேலைகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையிட்டு அவர்கள் ஆராய்ந்தனர்.

முதற்கட்டமாக திருத்த வேலைக்கான உபகரணங்கள் மற்றும் தொழிலாளர்களை கொண்டு வருவதற்கான வாகனப்பாதை தற்போது செப்பனிடப்பட்டுவருகிறது.

பெரும்பாலும் இன்று (சனிக்கிழமை) மாலை திருத்த வேலைகள் பூர்த்தியடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாறையில் இருந்து நிந்தவூர் பிரதான நீர்த்தாங்கிக்கு நீரை எடுத்து வருகின்ற பாரிய குழாய் உடைந்திருப்பதன் காரணமாக கடந்த மூன்று நாள்களாக கரையோரத்தில் குறிப்பாக நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களுக்கான குழாய்நீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டிருந்தது. மக்கள் பலத்த அசௌகரியத்திற்குள்ளாகியுள்ளனர்.

450 மில்லி மீற்றர் விட்டம் உள்ள சுமார் 20 மீற்றர் நீளமான இப் பாரிய குழாய் பெரு வெள்ளத்தில் அள்ளுண்டதால் இத்திடீர்த் தடை ஏற்பட்டது தெரிந்ததே.

சம்மாந்துறை பிரதேசத்தின் நயினாகாட்டை அடுத்துள்ள சுரிப்போடு முந்தல் என்ற பிரதேசத்தில் உள்ள பாரிய குழாயில் இவ் வெடிப்பு ஏற்பட்டிருந்தது.

நேற்று மழையில்லாத காரணத்தால் அங்கு இந்தத் திருத்த வேலைகள் இடம்பெற ஆரம்பித்தன.

# மேலதிக பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றிய வேலாயுதம் அரச பணியிலிருந்து ஓய்வுபெறுகிறார்!



(அபு அலா)

வெளி வள திணைக்களத்தில் மேலதிக பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி வந்த வேலாயுதம் மகேந்திரராஜா கடந்த 25 ஆம் திகதி அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

1990 ஆம் ஆண்டு பட்டதாரி முகாமைத்துவ பயிலுநராக அரச சேவையில் இணைந்து கொண்ட இவர், 1992 இல் திட்டமிடல் உத்தியோகத்தராக கடமையாற்றிய பின்னர் உதவி திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றினார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் கருத்திட்டங்களில் கருத்திட்ட இணைப்பாளராகவும், உலக வங்கியின் பிஐபி மற்றும் ஜிஐடி ஆகிய நிறுவனங்களில் கடமையாறினார்.

மேலும், பிரதிப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று வெளிவளத்திணைக்களத்தில் கடமையாற்றிய பின்னர், கிழக்கு மாகாண திட்டமிடல் செயலகத்தில் பிரதிப் பிரதம செயலாளராக 2008 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை கடமையாற்றினார். அக்காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கென சிறந்த சேவையாற்றினார்.

பின்னர் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சில் திட்டமிடல் பணிப்பாளராகவும், நிதி ஆணைக்குழுவில் பணிப்பாளராகவும் பல பதவிகளை வகித்துவந்த வேலாயுதம் மகேந்திரராஜா, தனது ஓய்வு நிலை வரும் வரை வெளி வள திணைக்களத்தில் மேலதிக பணிப்பாளர் நாயகமாக



கடமையாற்றி கடந்த 25 ஆம் திகதி அரச பணியிலிருந்து ஓய்வு நிலையையடைந்தார்.

அவரின் அரச சேவையை பாராட்டி திணைக்கள அதிகாரிகள், உத்தியேகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டு, நினைவுப் பரிசில்களும் வழங்கி வைத்தனர்.

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், இம்முறை மாவீரர் தின நினைவேந்தலின்போது ஒருசில இடங்களில் பொலிஸாரினால் அசௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டது தவிர வேறு தடைகள் இருக்கவில்லை. இம்முறை ஒரு நிறைவான நினைவேந்தல் வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஜனாதிபதிக்கும், தற்போதைய அரசிற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

## தோட்டப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் பிரதீப் நேற்று நேரடிக் களப் பயணத்தில் ஈடுபட்டார். வீடுகள் மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து அவர் ஆராய்ந்தார்.

இரத்தினபுரி ஹபுகஸ்தான, ரில்ஹேன, சமரகந்த, அந்தான, கஹவத்த மற்றும் தோட்டங்களைச் சுற்றியுள்ள பல வீடுகள் குளிர்ந்த மழை மற்றும் குளிர்ந்த காற்று காரணமாக சேதமடைந்துள்ளன. இதற்கிடையில், மக்கள் பலரும் பாதிக்கப்பட்டனர்.

இதேவேளை, மண்சரிவு அபாயம் அதிகம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என மக்களுக்கு உறுதியளித்த அமைச்சர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## கொலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதித்து தீர்ப்பளித்தது.

குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி ஆதித்திய படபட்டபெண்டி தனது தீர்ப்பில் தெரிவித்தார். குற்றவாளிகளான 6 பேரையும் ஜனாதிபதி குறிப்பிடும் நாளில் இறக்கும் வரை தூக்கிலிடுமாறும் அவர் தீர்பளித்தார். இதையடுத்து குற்றவாளிகளின் பிணை நீக்கப்பட்டு அவர்கள் வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

வருண சம்பத், நெப்போலியன் பீட்டர் குரூஸ், சுந்தரராஜ் பிரதீப் குமார், சுந்தரராஜ் கணேஷ் குமார், சுந்தரராஜ் சாந்த குமார் அல்லது சுஜீவா மற்றும் சூரஜ் மதுஷங்க ஆகிய 6 பேருக்குமே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 8 வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்தக் கொலையின் தீர்ப்பு இப்போது வழங்கப்பட்டுள்ளது.

2016 ஜூலையில் நாரஹேன்பிட்டி உத்யான வீதியில் உள்ள வீடொன்றில் வைத்து மஞ்சுள மகேஷ் ஜயதிலக்கவைக் கொன்றார்கள் என்றும் மேலும் 7 பேரைக் காயப்படுத்தினார்கள் என்றும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 6 பேர் உட்பட 8 பேர் மீது சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குற்றவாளிகள் நீதிமன்றத்தில் வாதிட்டதுடன், இந்த குற்றத்தில் தங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதால் தங்களை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். நீதிமன்றம் அதை நிராகரித்துவிட்டது.

## அரபுக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவடிப்பள்ளி பாலத்தில் உழவு இயந்திரம் (டிராக்டர்) கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அரபுக் கல்லூரி மாணவர்கள் உட்பட எட்டுப் பேர் உயரிழந்த துயர சம்பவமானது பொலிஸ் மற்றும் முப்படையினரின் அவதானக் குறைவினாலேயே நிகழ்ந்தது என்று அப்போது ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டினார்.

பாலத்திற்கு மேலாக வெள்ளம் பெருக்கெடுத்தோடிய நிலையிலும் பாதையை மூடாமல் போக்குவரத்துக்கு அனுமதியளித்தமையானது அவர்களின் பொறுப்பற்ற செயல் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

உயிரிழந்தவர்களின் வீடுகளுக்கு தாம் சென்றபோது அவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து விசனம் வெளியிட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆகையினால் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்திய ரவூப் ஹக்கீம் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு துரிதமாக இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனவும் இதுவரை மீட்கப்படாத மாணவரை மீட்பதற்காக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் இதன்போது வேண்டுகோள் விடுத்தார்.

இக்கோரிக்கைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை மாவடிப்பள்ளி பாலத்தில் இடம்பெற்ற உயிரிழப்புகள் தொடர்பிலும் இதுவரை மீட்கப்படாத மாணவரை தேடிக் கண்டுபிடிப்பதற்கான மேலதிக நடவடிக்கைகள் தொடர்பிலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பொலீஸ் மற்றும் படை அதிகாரிகளையும் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்

# புலம்பெயரும் தொழிலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்பாடு அவசியம்

## சர்வதேச தொழிலாளர் அமைப்பு வலியுறுத்து

இலங்கையிலிருந்து அதிகளவானோர் தொழிலுக்காக இடம்பெயர்வதனால், நெருக்கடியான சூழல்களில் அவர்களுக்கான பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் உதவிகளை உறுதிப்படுத்த வேண்டிய தேவைப்பாடு காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தரவுகளுக்கு அமைய, அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அவசரகால சந்தர்ப்பங்களில் அவர்களை வெளியேற்றுவதற்கான சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகாட்டுதல்கள் எதுவும் இலங்கையிடம் இல்லை எனக் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு குறித்த திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தொழிலாளர் அமைப்பு 6 பேர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், மொழிரீதியான தடைகள், கலாசார வேறுபாடுகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள வளங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் போன்ற பிரச்சினைகளை இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்கள் எதிர்நோக்குவதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஐ.ம.ச. தேசியப்பட்டியல் நியமனம் அடுத்த வாரம்

ஐக்கிய மக்கள் சக்தியின் எஞ்சியுள்ள தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு அடுத்த வாரத்துக்குள் உரியவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார். அவர் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசியபோது, கட்சியின் பொதுச்செயலாளர் தற்போது வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியுள்ளார், எனவே இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும். பெரும்பாலும் அடுத்தவாரத்துக்குள் இந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி ஏற்படும் என்றார்.

தேசியப் பட்டியல் ஆசனங்களுக்காக மனோகணேசன், ஏரான் விக்கரமரட்ன, ஹிருணிகா போன்றவர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மூன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவடமுனை, காங்கேயன் ஓடை ஆகிய இரண்டு ஆரம்ப மருத்துவ சிகிச்சை நிலையங்களும், செட்டிபாளையத்தின் பிராந்திய வைத்தியசாலையும் மூடப்பட்டுள்ளதாகவும், செட்டிபாளைய பிரதேச வைத்தியசாலையின் உள்நோயாளிகள் வேறு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மண்டூர், ஒழுகாமம், மகிழடித்தீவு, மண்டபத்தடி, நாவக்காடு, பாலமின் மடு ஆகிய பிரதேச வைத்தியசாலைகளும் மகிழூரில் உள்ள ஆரம்ப மருத்துவ சிகிச்சை நிலையமும் இடையூறுகளுக்கு மத்தியில் இயங்கி வருவதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

வெள்ளத்தினால் சேதமடைந்த வைத்தியசாலைகளின் சேத மதிப்பீடு அறிக்கையை வழங்குமாறு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## சிவப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த ஆழமான காற்றழுத்த தாழ்வு நிலை நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் புயலாக உருவெடுத்து திருகோணமலைக்கு வடகிழக்கே 310 கி.மீ தொலைவிலும் காங்கேசந்துரைக்கு வடகிழக்கே 280 கி.மீ தொலைவிலும் நிலைகொண்டுள்ளது.

அது புயலாக வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து இன்று தமிழ்நாடு கடற்கரையை நோக்கி நகர அதிக வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் வானிலையில் இந்த அமைப்பின் தாக்கம் இன்றைய தினத்தின் பின்னர் படிப்படியாகக் குறையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

நாட்டின் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வட மாகாணத்தில் சில இடங்களில் 100 மி.மீ. க்கு மேல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும்.

ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடக்கு, வடமத்திய, வடமேற்கு, கிழக்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னலினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாலைக்கதிர் Maalaikkathir




ஆசிரியர் பீடப் பணியாளர் தேவை

மாலைக்கதிர் நாளிதழில் ஆசிரியர் பீடத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

- உதவி ஆசிரியர் / பயிலுநர்கள்
- ஒப்பு நோக்குனர்

தகுதி, திறமையின் அடிப்படையில் கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் ஆர்வமுடையவர்கள் தமது சுயவிவரக்கோவையினை 077 307 78799 என்ற whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்

# முந்தல் பகுதியில் மின் தாக்கி கணவன், மனைவி உயிரிழப்பு

முந்தல் 412 ஏக்கர் பகுதியில் வியாழக்கிழமை மின்சாரம் தாக்கியதில் கணவனும் மனைவியும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 55 மற்றும் 52 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் -

தம்பதியர் வசித்துவந்த வீட்டுக்கு அருகில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வந்துள்ளனர்.

அந்நிலையத்தில்மின்சாரஇணைப்புக்காக பொருத்தப்பட்டிருந்தமின்கம்பியில்ஏற்பட்ட பழுதை கணவர் திருத்த முற்பட்டபோது, அவரை மின்சாரம் தாக்கியுள்ளது.

இந்நிலையில், கணவரை காப்பாற்ற முயன்ற மனைவியும் மின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

அதனையடுத்து, இருவரும் முந்தல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி கணவன், மனைவி இருவரும் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முதலையால் இழுத்து செல்லப்பட்ட நபர்

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலை பாறை பகுதியில் நபர் ஒருவரை முதலை இழுத்துச் சென்ற சம்பவமொன்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

முதலை பாறை பகுதியில் உள்ள ஆற்றிலிருந்து எருமை மாடுகளை மறுபுறம் விரட்டிச் சென்ற நபரை, முதலைபிடித்துஇழுத்துச்சென்றதாக பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பசரிச்சேனை பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபரே முதலையால்இழுத்துச்செல்லப்பட்டு காணாமல்போயுள்ளார்.

அந்தநபரைதேடும்நடவடிக்கையில் பொலிஸாரும் கடற்படை முகாம் அதிகாரிகளும்ஈடுபட்டுவருகின்றனர்.

## கோடரியால் வெட்டி மனைவி கொலை

### கணவன் தப்பியோட்டம்

கதிர்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்ல கதிர்காமம் ரஜ மாவத்தை பிரதேசத்தில் ஒருவர் தனது மனைவியை கோடரியால்வெட்டி கொலைசெய்துள்ளார் என கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

செல்ல கதிர்காமம் பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக கணவன் தனது மனைவியை கோடரியால் வெட்டி கொலைசெய்துள்ளார்எனவும், கொலையின் பின்னர் சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை கைது செய்வதற்கான மேலதிக நடவடிக்கைகளில் கதிர்காமம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# கம்பளையில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அங்குருமுல்ல பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர், அடபாகே பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவர் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது -

இறந்தவர் வேறொருவரின் காணிக்குள் அத்துமீறி நுழைந்து மிளகு பறிக்கச் சென்ற போது, காணியைச் சுற்றிப் போடப்பட்டிருந்த அனுமதியற்ற மின் கம்பியில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் கம்பளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சட்டவிரோதமான முறையில் மின்சார கம்பிகளை போட்ட காணியின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான, மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### நாவலப்பிட்டி தொலஸ்பாகே

## வீதியில் மண்மேடு சரிவு போக்குவரத்து பாதிப்பு

நாவலப்பிட்டி - தொலஸ்பாகே வீதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதுடன் மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளதால் அவ்வீதியின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீதியின் வெலிகொடவத்தை பகுதியில் நேற்று ஐ(வள்ளிக்கிழமை) அதிகாலை 2 மணியளவில் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதேவேளை, நாவலப்பிட்டியின் பல பகுதிகளில் மரங்கள் , மண்மேடு சரிந்து மின்கம்பிகள் மீது விழுந்துள்ளதால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முதலீட்டு உறவுகளுக்கு ஊக்கமளிப்பதற்காக தென்குஜராத் வர்த்தகர்கள் இலங்கை வருகை



தென்குஜராத் வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளன பிரதிநிதிகள் பத்து பேர் உள்ளிட்ட தூதுக்குழு ஒன்று 2024 நவம்பர் 24 முதல் 29 வரை இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

பலதுறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இத்தூதுக்குழுவின் விஜயம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே ஆழமான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. கொழும்பிற்கான விஜயத்துடன் கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களுக்கும் இக்குழுவினர் பயணிக்கின்றனர்.

கடல்சார்ந்ததுறைகளில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை ஒழுங்கமைக்கும் நிகழ்வில் இப்பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

ஈடிபி மற்றும் இலங்கை சுற்றுல்லா ஊக்குவிப்பு திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்களுக்கு மேலதிகமாக இக்குழுவானது, இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் இந்தோ லங்கா வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனம் உட்பட இலங்கையின் முக்கிய தரப்பினருடன் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளது.

மேலும் கபிட்டல் மஹாராஜா குழுமம் போன்ற முக்கிய நிறுவனங்களுடனும் ஏனைய முக்கிய தரப்பினருடனும் சந்திப்புகளை நடத்தவும் இக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

இத்தூதுக்குழுவின் நிகழ்ச்சிநிரலின் முக்கிய அம்சமாக குஜராத்தின் சூரத்தில், 2025 ஜனவரி 25 முதல் 27 வரை நடைபெறவிருக்கும் சர்வதேச கண்காட்சியான புடழடியட ஏடையடபந 2025 இன் விளம்பரப்படுத்தல் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இந்த நிகழ்வானது பல்வேறு பங்குதாரர்களுடன் இணைவதற்கு ஓர் ஈடிணையற்ற தளத்தை வழங்குவதுடன் ஒத்துழைப்பிற்கான புதிய வழிகளையும் ஆராய்கின்றது.

இந்தியாவில் பல்வேறு நிலைகளில் உள்ள வணிக ரீதியான அமைப்புகளை இலங்கையின் வர்த்தக சமூகத்துடன் இணைக்கும் தொடர் முயற்சிகளின் ஆரம்ப நகர்வினை இந்த விஜயம் குறிக்கிறது. இது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார பங்குடைமையினை மேலும் வலுப்படுத்தும் அதேநேரம் முதலீடு, பரஸ்பர வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான கதவுகளைத் திறக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### ஷானி அபேசேகர வழக்கில்

# பிரதிவாதிகள் தரப்பிலிருந்து விலகினார் சட்ட மா அதிபர்

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர தனது பணி இடைநிறுத்தத்திற்கு எதிராக தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோரை இனிமேல் பிரதிநிதித்துவப்படுத்தப் போவதில்லை என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இந்த மனு நேற்று எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டி.நவாஸ் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது, முன்னாள் பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்ரமரத்ன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோர் சார்பில் சட்டமா அதிபர் இனி ஆஜராகமாட்டார் என பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விவேகா சிறிவர்தன நீதிமன்றில் முன்னிலையாகி குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, பிரதிவாதிகளுக்கு தனிப்பட்ட சட்டத்தரணிகளை ஆஜர்படுத்தும் திறன் உள்ளதாக அமர்வு சுட்டிக்காட்டியுள்ளது. அதன்பின், மனு மீதான பரிசீலனை 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 03 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னர், குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த தன்னை காலி பிரதி பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக இடமாற்றம் செய்து, பின்னர் பணி நீக்கம் செய்ததன் ஊடாக தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு ஒன்றை வழங்குமாறு கோரி ஷானி அபேசேகர இந்த மனுவை சமர்ப்பித்திருந்தார்.

# யாழில் சீரற்ற வானிலையினால் 69 ஆயிரத்து 384 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நேற்று (வெள்ளிக்கிழமை) நண்பகல் 12.00 மணி வரையிலான நிலைவரப்படி 20 ஆயிரத்து 732 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 384 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

04 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 178 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும், 79 பாதுகாப்பு நிலையங்களில் 2 ஆயிரத்து 136 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 342 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

# கொக்கரெல்லையில் சட்டவிரோத சிகரெட்டுகளுடன் இருவர் கைது

குருணாகல், கொக்கரெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இப்பாகமுவ பிரதேசத்தில், சட்டவிரோத சிகரெட்டுகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் வியாழக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குருநாகல் முகாமின் அதிகாரிகள் குழு மேற்கொண்ட இரு வேறு சுற்றிவளைப்புக்களின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், இப்பாகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 32 மற்றும் 58 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேகநபர்களிடம் இருந்து, 400 சட்டவிரோத சிகரெட்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை, கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கொக்கரெல்ல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், மேலதிக விசாரணைகளை கொக்கரெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மருதங்கேணிப் பிரதேசத்தில் 391 குடும்பங்களுக்கு பாதிப்பு

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 391 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி தெரிவித்தார்.

364 குடும்பங்களைச் சேர்ந்த 1,069 பேர் உறவிர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். நான்கு நலன்புரி முகாம்களில் ஏனையவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

குடத்தனை - பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும், அம்பன் பிரதேசத்தில் சிவனொளி முன்பள்ளியில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும், நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும், மருதங்கேணி கிராம சேவகர் அலுவலகத்தில் ஒரு குடும்பங்களைச் சேர்ந்த 4 பேருமாக 27 குடும்பங்களைச் சேர்ந்த 91 பேர் நான்கு நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் அதிகரித்த வெள்ளம் காரணமாக வடமராட்சி கடல் நீரேரியில் அமைந்துள்ள மருதங்கேணி பிரதேசத்திற்கான ஒரே ஒரு போக்குவரத்து மார்க்கமாவும் ஏனைய பிரதேசங்களை இணைக்கும் வகையில் இருக்கும் தாழையடி புதுக்காடு பாதையில் அமைந்துள்ள மருதங்கேணி பாலம் உடைந்து போகும் நிலை காணப்பட்டது.

இதையடுத்து பாலத்தினுடைய இரு முனைகளிலும் மண் அரிக்கப்பட்டதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மண் அரிப்பு ஏற்பட்ட இரு பகுதிகளிலும் மணல் மூடைகளை அடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது செம்பியன்பற்று இராணுவ முகாம் கட்டளை அதிகாரியுடன் தொடர்புகொண்டு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அந்த முகாமை சேர்ந்த இராணுவத்தினரும் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு மணல் மூடைகள் அடுக்கப்பட்டு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மருதங்கேணி பாலத்தின் ஊடான போக்கு வரத்து சீர்செய்ய வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் நித்தியானந்தன் தெரிவித்திருந்தார். இருப்பினும் கனரக வாகனங்கள் பயணிப்பதனை இயன்றவரை குறைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு தெரியப்படுத்தியிருப்பதாக மருதன்கேணி பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன் கொடுக்கிளாய் - இயக்கச்சி பாதையில் இருக்கும் அபாய வெளியேற்றப் பாதை, வெள்ளம் மற்றும் அதிகரித்த வெள்ளம் காரணமாக முழுமையாக சேதமடைந்திருபனால் அவ்வீதியூடான போக்குவரத்து செய்ய முடியாத நில ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீதிகள், கட்டடங்களை அமைக்கும்போது உரிய விதிமுறைகளை பின்பற்றவில்லை

## யாழ். வெள்ள நிலை குறித்து ரஜீவன் எம்.பி. குற்றச்சாட்டு



வீதிகள், கட்டடங்களை அமைக்கும்போது உரிய விதிமுறைகளை பின்பற்றாமையும் குளங்களை தூர்வாருவது குறித்து கவனம் செலுத்தாததுமே யாழ்ப்பாணத்தில் வெள்ளம் வழிந்தோடாமல் தேங்கி நிற்பதற்குக் காரணம் என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் வெள்ள நிலைமைகள் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

புதன்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் இயற்கை அனர்த்தம் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் நடைபெற்றது. அதில் அமைச்சர் சந்திரசேகரும் கலந்துகொண்டார்.

வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களை பார்வையிட்டோம். அவர்கள் சுகாதார பிரச்சினைகளை எதிர்கொள்ளவில்லை.

பல பகுதிகளில் வெள்ளம் வழிந்தோடாமல் நிற்கிறது. யாழ்ப்பாணத்தில் வெள்ளம் வழிந்தோட வழியின்றி தேங்கி நிற்பதற்கு காரணம், வீதிகளை உயரமாக அமைத்தமையே ஆகும்.

வீதிகளைப் புனரமைத்து மீண்டும் அமைத்தவேளை அவற்றை உயரமாக அமைத்துள்ளனர். இதேபோல வீடுகளை, வர்த்தக நிலையங்களை அமைக்கும்போது விதிமுறைகளை பின்பற்றவில்லை. குளங்களை தூர்வாரவில்லை. வடிகால் அமைப்பு சிறந்த முறையில் இல்லை. பருத்தித்துறை வீதி இதற்கு ஓர் உதாரணம். அங்கு வடிகாலமைப்பு இல்லாத நிலை காணப்படுகிறது.

இவற்றுக்குத்தீர்வுகாண்பதற்குநீண்டகாலம் எடுக்கும்.

வெள்ளநீர்வடிந்தோடுவதற்கு இடமில்லாத நிலை காணப்படுகிறது. இதனால்தற்போதைய நிலை இன்னும் ஓரிரு தினங்கள் நீடிக்கலாம். சில பகுதிகளில் நீண்ட நாள்களுக்கும் நீடிக்கலாம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவது குறித்து அரசாங்கம் அதிக அக்கறையுடன் செயற்படுகிறது. தேசிய மக்கள் சக்தியும் தன்னை இணைத்துக்கொண்டுள்ளது.

பல்கலைக்கழக சமூகம், வர்த்தக சமூகம், லயன்ஸ் கழகம் உட்பட பல தரப்பினருடன் இணைந்து உதவிகளை வழங்கி வருகின்றோம். எனினும் இந்த உதவிகள் போதுமானதாகவையாக இல்லை. இதன் காரணமாக ஏனைய அனைவரும் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வரவேண்டும்.

தற்போதைய சூழலில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓரளவுக்கு உதவிகளை வழங்கிவருகின்றோம். சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றோம்.

கூலி வேலைகளுக்கு செல்பவர்கள், அன்றாடம் உழைத்து உண்பவர்களின் நிலைமையே மிகவும் கஷ்டமானதாக காணப்படுகிறது. அவர்கள் உலர் உணவை கோருகின்றனர்.

சமூக நிறுவனங்கள் இவற்றை வழங்க முன்வரவேண்டும். இவற்றை கிராம சேவகர்கள், மாவட்ட, பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்க முன்வரவேண்டும்.

குடிநீர் பிரச்சினை, குழந்தைகளுக்கான உணவுப் பிரச்சினை போன்றவையும் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

சில இடங்களில் அதிகாரிகளின் அசமந்தப்போக்கை அவதானிக்க முடிகிறது. அதிகாரிகள் மக்களுக்கு முழு மனதோடு உதவ முன்வரவேண்டும். - என்றார்.

# கிளிநொச்சியில் வெள்ள பேரிடர்

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள நிலைமை வடிந்து வருகின்றது. தொடர்ந்தும் மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர். மாவட்டத்தில் 13 இடைத்தங்கல் நிலையங்களில் 320 குடும்பங்களைச்சேர்ந்த 910பேர் தங்கியுள்ளனர்.

தங்கியுள்ள மக்களுக்கு மாவட்ட தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்ப்பிரிவின் வைத்தியர் க.ரஞ்சன் தலைமையில் முகாம்களில் உள்ள மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

வெள்ள அனர்த்தத்திற்குள்ளான மக்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறை தொடர்பாகவும் கருத்து தெரிவிக்கின்றார். (113)

# பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கவேண்டிய பொறுப்பு பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு உள்ளது

## முஸ்லிம் சமய திணைக்களப் பணிப்பாளர் நவாஸ் வேண்டுகோள்




(ஸாகிர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்குவது சம்பந்தமாக நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள் ஃ நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்து கடிதமொன்றை வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக பல இடங்களில் வெள்ளப்பாதிப்பால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தவகையில் பள்ளிவாசல்கள், பொது நிறுவனங்கள் என்ற வகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகள் வழங்க வேண்டிய பொறுப்பும் பள்ளிவாசல் நிருவாகிகளுக்கு உள்ளது.

குறிப்பாக, மேற்படி உதவி நடவடிக்கைகளை பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் பள்ளிவாசல்களினூடாகவே மேற்கொள்ள வேண்டும் என இலங்கை வக்பு சபையும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் தெரிவித்துள்ளது.

எனவே, பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களினூடாகவே இப்பணிகளை மேற்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட்டுவாகல் பாலம் புனரமைக்கப்படும் பிரதி அமைச்சர் உபாலி உறுதியளிப்பு



வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் கோரிக்கையை ஏற்று கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க உட்பட, நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், செ.திலகநாதன், ம.ஜெகதீஸ்வரன் ஆகியோருடன் முல்லைத்தீவு மாவட்டசெயலர், திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் நேற்று (வெள்ளிக்கிழமை) முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தைப் பார்வையிட்டனர்.

அதேவளை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் முன்வைத்த கோரிக்கையை ஏற்று, உரிய அமைச்சுக்களுடன் பேசி புதிய பாலத்தை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வெள்ளிக்கிழமை அனர்த்தப் பாதிப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராயும் விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில் வட்டுவாகல் பாலம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியதுடன், அதனால் குறித்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் குறித்தும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அத்தோடு குறித்த வட்டுவாகல் பாலத்தை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க உள்ளிட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டசெயலர் உள்ளடங்கலாக, திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் நேரடியாக பார்வையிட்டு, புதிய பாலத்தை அமைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைய ரவிகரன் அவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, உள்ளிட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், திணைக்கள அதிகாரிகளும் வட்டுவாகல் பாலத்திற்கு நேரடி விஜயமொன்றை மேற்கொண்டு வட்டுவாகல் பாலத்தின் பாதிப்பு நிலைமைகள் தொடர்பில் நேரடியாகப் பார்வையிட்டனர்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்ரவிகரனின்கோரிக்கையை ஏற்று இந்த விடயத்தை உரிய அமைச்சுக்களுடனும், ஜனாதிபதி உள்ளிட்டவர்களுடனும் பேசி புதிய பாலம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு தேசியமக்கள்சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய உதவி வழங்கவில்லை

## கீதநாத் காசிலிங்கம் சாட்டை



இலங்கையின் வடமாகாணத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு அந்த மாகாணத்திலிருந்து புதிதாக தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போதியளவு உதவிகளை வழங்கவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்திலிருந்து புதிதாக தெரிவுசெய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவி வழங்க தவறிவிட்டனர் எனக் குறிப்பிட்டுள்ள அவர், யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளில் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கடும் வெள்ளத்தால் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரை பத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர், பல குடும்பங்களிற்கு உணவு புகலிடம் மருத்துவ உதவிகள் அவசர தேவையாக உள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இயற்கை அனர்த்தம் நிகழும்போது பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவிகளை வழங்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை, உணவு மருந்து அத்தியாவசிய தேவைகளை வழங்கவேண்டும்,எனினும் மழை வெள்ள அனர்த்தம் நிகழ்ந்து பல நாள்கள் ஆகியுள்ள போதிலும், புகைப்படங்களை எடுத்து வெளியிடுவதை தவிர வடமாகாணத்திலிருந்து புதிதாக தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதனையும் செய்யவில்லை என கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு தேசியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கவில்லை. இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன போன்ற கட்சிகளை நம்பியிருக்கின்றனர். நாங்கள் உணவு மருந்துகளை வழங்குகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் இரவு, பகலாக பணியாற்றுகின்றோம். வானிலை அவதான நிலையம் வெளியிட்டுள்ள அறிவிப்புகளை அடிப்படையாகவைத்து திட்டமிடுகின்றோம் என குறிப்பிட்டுள்ள அவர், தேசிய மக்கள் சக்தியினர் பெருவெற்றியை பெற்றனர். மக்கள் அவர்களிடமிருந்து பொறுப்புணர்வுமிக்க அரசாங்கத்தை எதிர்பார்க்கின்றனர். எனினும் ஒரு சில வாரங்களில் அவர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டனர். இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் துன்புறுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

மாவட்டங்கள் வெள்ளத்தால் மூழ்கிய பின்னரே ஜனாதிபதி நிவாரண நடவடிக்கைகளிற்கு உத்தரவிட்டார். சில வாரங்களிற்கு முன்னரே கடும் மழை குறித்து எதிர்வுகூறப்பட்டது எனவும் தெரிவித்துள்ள அவர், மக்கள் குறித்து அர்ப்பணிப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களிற்கு தேவை. அனர்த்தநேரங்களில் பொதுமக்களைக் கைவிடுபவர்கள் தேவை இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஹெரோயினுடன் ஒருவர் கல்கிசையில் கைது

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுகுருந்துவத்தை பிரதேசத்தில், ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் வியாழக்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கல்கிசை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவிற்குகிடைத்தஇரகசியதகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடம் இருந்து, 15 கிராம் 400 மில்லிகிராம்ஹெரோயின்போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக கல்கிசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான, மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.11.2024இல் வெளியிடப்பெற்றது